

# *புனித ஜோஸ்மரியா எஸ்கிரிவா*

## ஒபுஸ் தேய் நிறுவனர்

## ஜெபம்

*இறைவா, புனித கன்னி மரியாயின் வழியாக எண்ணற்ற வரங்களை உமது குரு புனித ஜோஸ்மரியாவுக்கு அளித்துள்ளீர். அவரை ஒரு மிகச்சிறந்த கருவியாக தேர்ந்தெடுத்து ஒபுஸ்தேயை நிறுவினீர். அதன் வழியாக கிறிஸ்தவன் தன்னுடைய அன்றாட அலுவல் மற்றும் கடமைகளை உரியமுறையில் நிறைவேற்றவும், தன் வாழ்வை புனிதப்படுத்தவும் அருள் செய்துள்ளீர். நானும் என் வாழ்வில் நிகழும் அனைத்து செயல்களையும், நிகழ்ச்சிகளையும் உம்மை அன்பு செய்யும் சந்தர்ப்பங்களாக மாற்றவும், திருச்சபைக்கும், அதன் தலைவர் திருத்தந்தைக்கும், அனைத்து இறைமக்களுக்கும் மகிழ்ச்சியோடும், பணிவோடும் இறைபணி செய்து, அதன் மூலம் விசுவாசத்தின், அன்பின் ஒளியை பரப்பிட தேவையான அருளைத்தாரும்.*

*புனித ஜோஸ்மரியாவின் பரிந்துரையால் நாங்கள் கேட்கும் மன்றாட்டுகளையும் வரங்களையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை இரந்து மன்றாடுகிறேன்... (தேவையான வரங்களை கேட்கவும்). ஆமேன்.*

பரலோக... , அருள்நிறை மரியே... , பிதா சுதன் பரிசுத்த ஆவி... .

*“எங்கெல்லாம் உன் பாசத்தை பகிர்ந்துகொள்ளும் ஆர்வம், செய்யும் தொழிலின் கடமை உணர்வு, பிறர் அன்பு செய்தல் வெளிப்படுகிறதோ, அவ்வாறான நிலை கிறிஸ்துவுக்கு ஏற்புடையதாகிறது. இந்த சூழ்நிலை, இப்பூமியில் நம்மை நாமே தூய்மைபடுத்திக்கொள்ளவும், கடவுளுக்கும், மக்களுக்கும் சேவைசெய்ய கிடைக்கும் வாய்ப்புகளாகும். என் மகனே, மகளே, இந்நிலையில் பரலோகமும் பூலோகமும் ஒருங்கிணைந்து காணப்படும். உன்னுடைய தினசரி வாழ்க்கையை புனிதப்படுத்தி வாழும்போது உங்கள் இதயங்களில் இந்த சந்திப்பு உண்மையாகவே காணப்படும்.”*

புனித ஜோஸ்மரியா எஸ்கிரிவா *பூலோகத்தை தீவிரமாக நேசித்தாய் என்ற* அக்டோபர் 8, 1967 உரை.

புனித ஜோஸ்மரியா எஸ்கிரிவா ஸ்பானிய நாட்டில் பார்பஸ்டரோ என்னும் ஊரில் 1902ம் ஆண்டு சனவரித்திங்கள் 9ம் நாள் பிறந்தார். 1925ம் ஆண்டு மார்ச் திங்கள் 28ம் நாள் சரகோசா என்னும் ஊரில் குருவானவராக திருநிலை படுத்தப்பட்டார். 1928ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ம் நாள் இறைஉணர்வால் ஒபுஸ் தேய் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். 1975ம் ஆண்டு சூன் திங்கள் 26ம் நாள் உரோமாபுரியில் அவர் வேலை செய்து வந்த அறையில் எதிர் பாராத நிலையில் புனித அன்னையின் படத்தை அன்புடன் தரிசித்தபிறகு காலமானார். அப்போது அவர் ஏற்படுத்திய ஒபுஸ் தேய் நிறுவனம் ஐந்து கண்டங்களிலும் பரவி 80 நாடுகளில் நிறுவப்பட்டு அதன் 60,000 உறுப்பினர்கள் திருத்தந்தையோடும், தலைமை குருக்களோடும் ஒருங்கிணைந்து அதே ஆர்வத்துடன் பணிபுரிவதில் புனித ஜோஸ்மரியாவின் வழிமுறைகளைக் கடைபிடித்தனர். 2002ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6ம் நாள் பாப்பிறை இரண்டாம் சாண்பால் அவரை புனிதர் நிலைக்கு உயர்த்தி அறிவித்தார். சூன் திங்கள் 26ம் நாள் புனிதர் ஜோஸ்மரியாவின் நினைவு தினமாக கொண்டாடப் படுகிறது. உரோமாபுரியிலுள்ள சமாதானத்தின் அனனையின் பிரலாட்டிக் ஆலயத்தில் அவர் சரீரம் வைக்கப்பட்டுள்ளது (Prelatic Church of Our Lady of Peace, Viale Bruno Buozzi 75, Roma).

புனித ஜோஸ்மரியா எஸ்கிரிவாவின் விவரங்களை தெரிந்து கொள்ள:
www.josemariaescriva.info www.escrivaworks.org

புனித ஜோஸ்மரியா எஸ்கிரிவாவின் வேண்டுதல் மூலமாக நன்மை அடைந்தவர்கள் அதன் விவரங்களை Opus Dei Prelature, P.O. Box 4559, New Delhi 110 016 என்ற முகவரிக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.*